ஆகாயத்திற் பிரயாணஞ்செய்வார்கள். அப்படிச்செய்ததுமாத்திரமல்ல, ஆகாயத்திற் சண்டைகளுங் கூடப்போடுவார்கள். அவ்வித்தையி லிவ்வளவு தேர்ச்சியை யடைந்திருக்கவேண்டுமானால், அவர்கள் அதைப்பற்றிய சகல சாத்திரங்களையும், சாதனங்களையும், ஆகாயத்திலிருக்கும் சகலகாற்றுச்சுருக்களையும், ஓட்டங்களையும், அங்கங்கேயிருக்கும் சீதோஷ்ண நிலைமைகள், ஈரம், நெருக்கமுதலியவைகளையும், வெவ்வேறுவாயுவின் விசிஷ்டகுருத்துவத்தையும் பூரணமாய்த்தெரிந்திருக்கவேண்டும். மகாபாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிற "மாயா சபையில்" 'பூதக்கண்ணாடிகளும், தூரதிருஷ்டிக்கண்ணாடிகளும், கெடிகாரங்களும், நாழிகைவட்டங்களும், யாமே சூத்திரபக்ஷிகளும், பேசும் சூத்திரமிருகங்களும் இருந்தன. தவிரவும், அவர்கள் "அஷ்டர் வித்யா" என்ற வேறோர் வித்தையையும் அறிந்திருந்தார்கள். அதனால், அவ்வித்தையிற் பாண்டித்தியமுடையவர்கள், சத்துருக்களுடைய சேனைகளை, விஷமுள்ள வாயுக்களாலும் அச்சமுறுத்தத்தக்க மாயாவடிவங்களாலும், இடிமுண்டாக்கக்கூடிய சப்தங்களாலும் நிறையப்பட்ட ஆகாயத்தாற் சூழ்ந்துகொண்டு அவைகளை யழித்துப்போடுவார்கள். இந்தச் சாத்திரத்தைக்குறித்து எங்கள் தேசத்து வித்துவான்களுக்கு இன்றைவரைக்கு மெவ்வளவேனுமிலுந் தெரியவராது.

வெள்ளைக்காரருடைய நாகரீகமானது ஆரியாவர்த்தத்தில் உற்பத்தியாயிற்றென்பதாக நம்க்குஐரோப்பிய தேசத்துப் பாஷைகளையும், சம்ஸ்கிருத பாஷைகளையும் வாசித்து ஒத்துப் பார்ப்பதினால் துலங்குகிறது. அதுபோலவே, நாம் பாபிலேனியா, இஜிப்து, கிரீஸ், ரோம், வடஐரோப்பாமுதலிய தேசங்களின் சாத்திரங்களையும், மார்க்கங்களையும்வாசித்துப்பரித்

